வணிகவரி ஆணையர் அலுவலகம்,
எழிலகம், சேப்பாக்கம், சென்னை 5

சுற்றறிக்கை எண் 13 /.2007 நாள் 18.5.2007

சுற்றறிக்கை

பொருள் வணிக சின்னம் பதிவு செய்திடாத நெய் (எவை) குறித்து விளக்க அறிக்கை கோருதல் தொடர்பாக

பார்வை தமிழ்நாடு வியாபாரிகள் கூட்டமைப்பு, திருச்சி கடிதம் நாள் 20.4.2007

---

தமிழ்நாடு வியாபாரிகள் கூட்டமைப்பு, வணிகவரி அதிகாரிகள் brand name என்பதை சரியாக புரிந்து கொள்ளும் விதமாக அறிக்கை ஒன்று அளிக்கும்படி மனு அளித்துள்ளனர்.

வெறும் பெயர் போட்டு விற்கும் பொருட்கள் அனைத்தும் brand name போட்டு விற்பதாக அர்த்தம் அல்ல. தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் 2006 பிரிவு 9 (2) ல் brand என்பதற்கு அர்த்தம் சொல்லப்பட்டுள்ளது. Brand என்பது பெயராகவோ அல்லது வணிக சின்னமாகவோ Trade and Merchandise Marks Act 1958 or Trade Marks Act 1999 பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டும். அதாவது வணிகப் பெயரோ அல்லது வணிக சின்னமாகவோ மேற்கூறிய சட்டங்களில் பதிவு பெற்றிருத்தல் வேண்டும். எனவே, ஒரு பெயரோடு விற்கும் பொருட்களை brand name உடையவை எனக் கருதல் ஆகாது. உதாரணமாக ஒரு பொருள் ‘‘ஜெயம்’’ என்ற பெயரைப் போட்டு விற்றால் மட்டும் அது branded ஆகாது. அந்த பெயர் Trade and Merchandise Marks Act 1958 அல்லது Trade Marks Act 1999 செய்யப்பட்டிருக்கவேண்டும். ஆகவே, அவ்விதம் பதிவு செய்யப்படாத பொருட்களை branded என குறிப்பிடக்கூடாது. உதாரணமாக பெயர் பதிவு செய்யப்படாத ‘‘ஜெயம்’’ என்ற பெயரில் நெய் விற்றால் அது unbranded நெய் என்றே கருதப்படும். அதற்கு 4 சதவிகிதம் வரி விதிக்கப்படும்.

எனவே, அலுவலர்கள், பெயரிட்டு விற்கப்படும் அனைத்து பொருட்களையும் branded பொருட்களாக கருதக்கூடாது. அதிகாரிகளுக்கு இதுகுறித்து ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால் இவ்வலுவலகத்தைத் தொடர்பு கொண்டு தெளிவுரைகள் பெற வேண்டுமென தெரிவிக்கப்பகிறது. தவறான விளக்கம் தரும் அதிகாரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(ஒம்) த.ஜேக்கப்,
வணிகவரி ஆணையர்

பெறுநர்
இணை ஆணையர் (வவ) சென்னை (வடக்கு)
அனைத்து துணை ஆணையர்கள்  செயலாக்கம் உட்பட
துணை ஆணையர் (இடைமாநில குழு)
துணை ஆணையர் (கணிப்பொறி)
இயக்குநர், வணிகவரி பணியாளர் பயிற்சி மையம்
அனைத்து இணை ஆணையர்கள் மற்றும் துணை ஆணையர்கள்
வணிகவரி  ஆணையர் அலுவலகம்,
முதன்மை யெல்வ அலுவலர், வணிகர் நல வாரியம்

/உண்மை நகல் உத்திரவுப்படி.

இணை ஆணையர் (மகூவ)